ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2105/39 - 2019 ජනවාරි මස 10 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.01.10

*2105/39 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 43 ஆம் உறுப்புரையின் (1) ஆம் உப உறுப்புரையின் வண்ணம், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால், 2018, திசெம்பர் மாதம் 28 ஆந் திகதிய 2103/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலானது, 2019, சனவரி மாதம் 09 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு திருத்தப்படுகின்றது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மைத்திரிபால சிறிசேன,**
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2019, சனவரி 10.

**அட்டவணை**

(1) அவ்வறிவித்தலில் கல்வி அமைச்சர் (இல. 25) என்ற தலைப்புத் தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் நிரல் I இல் காட்டப்பட்டுள்ள 18 ஆவது விடயத்தை நீக்குவதன் மூலம் ;

(ஆ) அதன் நிரல் I இல் 19 மற்றும் 20 ஆகிய விடயங்களை மீண்டும் இலக்கமிடுவதன் மூலம் ;

(இ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 12 மற்றும் 13 ஆகிய விடயங்களை நீக்குவதன் மூலம் ;

(ஈ) அதன் நிரல் II இல் 14 ஆவது விடயத்தை மீண்டும் இலக்கமிடுவதன் மூலம் ;

1A - G 28934 — 387 (2019/01)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(உ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள பின்வரும் விடயங்களை நீக்குவதன் மூலம் :

* (1996 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க) புத்த சிராவக்க பிக்கு பல்கலைக்கழகச் சட்டம்
* (1981 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க) இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகச் சட்டம்

(2) அவ்வறிவித்தலில் நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் (இல. 8) என்ற தலைப்புத் தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் நிரல் I இல் காட்டப்பட்டுள்ள 14 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம் :

15. பௌத்த மற்றும் பாளி கற்கைப் பணிகளை ஊக்குவித்தலும் மத ரீதியான கல்வியின் நோக்கங்கள் பூர்த்தியாகும் வகையில் பிரிவெனா கல்வியை உயர்த்துதலும் ;

(ஆ) அதன் நிரல் I இல் 15 மற்றும் 16 ஆகிய விடயங்களை மீண்டும் இலக்கமிடுவதன் மூலம் ;

(இ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 7 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலம் :

"8. புத்த சிராவக்க பிக்குகள் பல்கலைக்கழகம்
9. பௌத்த, பாளி பல்கலைக்கழகம்"

(ஈ) அதன் நிரல் III இல் "(1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க) மகாபொல உயர் கல்வி புலமைப் பரிசில் சட்டம்" என்பதற்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலம் :

* (1996 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க) புத்த சிராவக்க பிக்கு பல்கலைக்கழகச் சட்டம்
* (1981 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க) இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகச் சட்டம்

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.